# ஆண்டறிக்கை

# 2012

# முகவுரை

தொழில் திணைக்களத்தின் 2012 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இத்திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் கீழ் 13 பிரிவுகள் தொழிற்படுவதுடன், பிரதேசரீதியில் 11 வலய தொழில் அலுவலகங்கள், 39 மாவட்ட தொழில் அலுவலகங்கள், 18 உப தொழில் அலுவலகங்கள் மற்றும் 10 மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகங்கள் தொழிற்படுகின்றன. சட்டவாக்க மன்றமானது, உழைக்கும் வர்க்கத்தின் பாதுகாப்பு மற்றும் நலன்புரிக்காக 50 கட்டளைச்சட்டங்களையும் மற்றும் சட்டங்களையும் கைக்கொண்டுள்ளது. தொழில் பரிசோதனை செயன்முறையைப் பயனுறுதிவாய்ந்ததாக ஆக்குவதற்காக மேற்பார்வை யிடுதல் என்ற விடயம் விரிவுபடுத்தப்பட்டிருந்ததுடன், அதன் விளைவாக நாடளாவியரீதியில் வருடாந்தம் அறிக்கையிடப்படுகின்ற கைத்தொழில் பிணக்குகளின் எண்ணிக்கையைக் குறைப்பது குறிப்பிடத்தக்களவில் சாத்தியமாகியிருந்தது.

அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானமொன்றின் அடிப்படையில் அரச துறைப் பணியாளர்களின் வேதனங்களை அதிகரிப்பதற்கு சமாந்திரமாக தனியார் துறைப் பணியாளர்களின் ஆகக்குறைந்த வேதனத்தை அதிகரிப்பதானது 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதன்படி, 2013.01.01 ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்து, தற்போது தொழிற்படுகின்ற 44 சம்பளச் சபைகளில் 18 சம்பளச் சபைகளின் ஆகக்குறைந்த சம்பள மட்டத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எஞ்சியிருக்கின்ற சம்பளச் சபைகளின் ஆகக்குறைந்த சம்பளங்களை 2013 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசாங்க சேவையை மக்களுடன் மிகவும் நெருங்கிய வகையிலும், பயனுறுதிவாய்ந்த முறையிலும் வழங்கும் குறிக்கோளுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட இ-அரசாங்க நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து இத்திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதியத்தின் செயற்பாடுகளை நவீன தொலைத் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை மிகவும் பயனுறுதிவாய்ந்த முறையில் பயன்படுத்திச் செய்ய முடிந்தமை திணைக்களம் அடைந்திருந்த வெற்றியொன்றாகும். திணைக்களத்தின் தொழில் பரிசோதனை செயன்முறையினை மேற்பார்வை செய்வதற்காக புதிய கணினி மென்பொருளை உருவாக்குவதற்கும், உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்குமான செயற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதுடன், இத்திணைக்களத்தின் தொலைநோக்கான தொழில் பரிசோதனைச் செயன்முறை யினை மேலும் பலப்படுத்துவதன் மூலம், சர்வதேச பொருளாதாரத்தில் அதிகளவில் போட்டித் தன்மையான இலங்கைப் பொருளாதாரமொன்றை உருவாக்கும் நோக்கில் நாட்டில் தொழிற்றுறை அமைதியைத் தாபிப்பதே இறுதி எதிர்பார்ப்பாகும்.

இந்த அனைத்து முன்னேற்றகரமான செயற்பாடுகளிலும், தமது பங்களிப்பினை நல்கியிருந்த திணைக்களத்தின் அனைத்து, சுமார் 2,220 அலுவலர்களையும் நான் பாராட்டுகின்றேன். அத்துடன், தொழில், தொழில் உறவுகள் அமைச்சு மற்றும் சர்வதேச தொழில் தாபனத்தின் இலங்கை அலுவலகத்தினால் வழங்கப்பட்ட உதவிகளுக்கும் எனது நன்றிகள் உரித்தாகுகின்றன.

வி.பி.பீ.கே.வீரசிங்க
**தொழில் ஆணையாளர் அதிபதி**

தொழில் திணைக்களம்,
தொழில் செயலகம்,
கொழும்பு- 05.

# பொருடக்கம்



| | |
|---|---|
| தொழிற்றுறை அமைதி | 01 |
| சம்பளங்கள் மற்றும் சேவை நிபந்தனைகள் | 02 |
| சமூகப் பாதுகாப்பு | 03 |
| தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் | 04 |
| விசேட துறைகள் | 05 |
| பொது நிருவாகம் | 06 |
| புள்ளிவிபரக் கையேடு | 07 |
| பின்னிணைப்பு | 12 |


## தொழிற்றுறை அமைதி

சர்வதேசப் போட்டித் தன்மைக்கு முகம்கொடுப்பதில் உள்நாட்டு உற்பத்திகளைப் பாதுகாக்கின்ற அதேவேளையில், தேசிய உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு வேலைத்தலக் கூட்டுறவும், தொழிற்றுறை அமைதியும் அத்தியவசியமான காரணிகளாகின்றன. விதித்துரைக்கப்பட்ட சம்பளங் களையும், சேவை நிபந்தனைகளையும் நடைமுறைப்படுத்தி, உரிய தொழில் பரிசோதனைச் செயன்முறையொன்றினூடாக தொழிற்றுறைப் பிணக்குகளைக் குறைப்பதன் மூலமும், ஓய்வு வாழ்க்கைக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை உருவாக்குவதன் மூலமும் தொழிற்றுறை அமைதியைத் தாபிக்க முடியும்.

### தொழில் பரிசோதனைகள்

கீழே தரப்பட்டுள்ள வரைபடங்கள், திணைக்களத்தில் அலுவலர்களினால் ஆற்றப்பட்ட தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கையையும், கடந்த ஆண்டு காலப்பகுதியில் அறிவிக்கப்பட்டுள்ள கைத்தொழில் பிணக்குகளின் எண்ணிக்கையையும் விபரிக்கின்றன.




2006 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர், பொதுவாக, நாடு முழுவதிலும் ஒரு ஆண்டு காலப்பகுதியில் செய்யப்பட்ட தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கை 30,000 இற்கும் குறைவாக இருந்தது. எனினும், தற்போது திணைக்களத்தின் அலுவலர்கள் ஆண்டொன்றிற்கு சுமார் 80,000 தொழில் பரிசோதனைகளைச் செய்துள்ளனர். தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுகையில் கைத்தொழில் பிணக்குகள் குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்துள்ளமை யைக் காணமுடிந்துள்ளது.

### தொழில் பரிசோதனைகளின் தரத்தை உயர்த்துதல்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வரைபடங்கள், தொழில் பரிசோதனையின் எண்ணிக்கையில் அதிகரிப்பினை விபரிக்கின்ற போதிலும், அத்தகைய பரிசோதனைகளின் தரத்தைப் பேணுவது மிகவும் முக்கியமானதாகும். இந்தக் குறிக்கோளுடன், இத்திணைக்களமானது, வலய மட்டத்தில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்துகின்றது. 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அத்தகைய 5 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. இந்தக் கூட்டங்களில், அலுவலர்களினால் செய்யப்படுகின்ற பரிசோதனைகளில் இருக்கின்ற குறைபாடுகள் இனங்காணப்பட்டிருந்ததுடன், அவர்களது குறைபாடுகளைத் திருத்துவதற்கு அவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. விசேட குறைபாடுகள் தொடர்பில் தொழில் ஆய்வு அலகு ஆழமாகக் கவனம் செலுத்துகின்றது.

### பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழிற்றுறை அமைதி

இத்திணைக்களமானது, தொழில் கட்டளைச்சட்டங்கள், சட்டங்களின் ஏற்பாடுகளை மீறுதல் தொடர்பிலும், வெவ்வேறு கட்டளைச்சட்டங்கள், சட்டங்களின் கீழ் தாக்கல் செய்யப்படுகின்ற எண்ணிக்கையிலான வழக்குகள் தொடர்பான விபரங்கள் தொடர்பிலும் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்கின்றது. அதேபோன்று இத்திணைக்களமானது, தொழில் பிணக்குகள் மற்றும் தேசிய நலன்களில் குழப்பம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் உடனடியான தலையீடு தேவையானவிடத்து விசேட விசாரணைகளை நடத்துவதுடன், தேவையான நடவடிக்கைகளையும் எடுக்கின்றது.

## சம்பளங்கள் மற்றும் சேவை நிபந்தனைகள்

தனியார் துறைப் பணியாளர்களின் தொழில் மற்றும் நலன்புரியின் பாதுகாப்பினைப் பாதிக்கின்ற சேவை நிபந்தனைகள் மற்றும் நியதிகளைத் தீர்மானிப்பதற்கான நியமங்கள் பற்றி அறிவுறுத்துவதற்கும், பின்வருகின்ற கட்டளைச்சட்டம் மற்றும் சட்டங்களின் கீழ் அவற்றிற்கு சட்ட அந்தஸ்தினை வழங்குவதற்கும், மேற்பார்வை செய்வதற்குமான செயற்பாட்டிற்காக இத்திணைக்களம் நடவடிக்கை எடுக்கின்றது.

1. 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்.
2. 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் (தொழில், ஊதியத்தின் ஒழுங்கமைப்பு) சட்டம்.
3. 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டம்.

### சம்பளச் சபைகள்

தற்போது இலங்கையில் 44 சம்பளச் சபைகள் தொழிற்படுகின்றன. 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவை தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன :

- செயற்படக்கூடிய காலப்பகுதி முடிவடைந்திருந்த 06 சம்பளச் சபைகளுக்கு நியமனங்கள் செய்யப்பட்டிருந்ததுடன், 11 சம்பளச்சபைகளில், மரணமடைந்த மற்றும் இராஜினாமாச் செய்திருந்த அதேபோன்று வெளிநாடு சென்றிருந்த அங்கத்தவர்களின் இடத்திற்கு புதிய அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.
- ஹோட்டல்கள் மற்றும் உணவுவிடுதிச் சேவைச் சம்பளச் சபைகளின் சேவை நிபந்தனைகள் பிரசித்தப்படுத்தப்பட்டிருந்தன.
- மலர்கள், அலங்காரத் தாவரங்கள், மரக்கறிகள் மற்றும் பழப் பயிர்ச் செய்கை மற்றும் ஏற்றுமதித் தொழில் ஆகியவற்றிற்கு சம்பளச் சபைகளைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.
- இறப்பர் வளர்ப்பு மற்றும் உற்பத்தித் தொழிலை உள்ளடக்குவதற்காக சம்பளச் சபையின் மேவுகையை விரிவுபடுத்துவதற்கு கருத்துக்கள் கோரப்பட்டிருந்தன.
- தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்ததாக தாபனங்களின் சம்பளங்கள் மற்றும் சேவை நிபந்தனைகள் தொடர்பில் 4 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

### தனியார் துறைப் பணியாளர்களின் ஆகக்குறைந்த சம்பளங்களின் மட்டத்தை அதிகரித்தல்

இந்த ஆண்டு காலப்பகுதியில், சம்பளச் சபைகளினால் உள்ளடக்கப்பட்டிருந்த தனியார் துறைப் பணியாளர்களின் ஆகக்குறைந்த சம்பளத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் 38 சம்பளச் சபைகளின் 23 பிரதிநிதிகளுக்கு கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவற்றில் 18 சம்பளச் சபைகளின் சம்பளங்கள் 2013.01.01 ஆம் திகதியிலிருந்து வலுவிற்கு வருவதாகத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. ஏனைய சம்பளச் சபைகளின் ஆகக்குறைந்த சம்பள மட்டத்தை அதிகரிப்பது தொடர்பான செயற்பாடுகள் அடுத்த ஆண்டின் முதல் காலப்பகுதியில் நிறைவுசெய்வதற்கு திட்டமிடப்படுகின்றது.


## சமூகப் பாதுகாப்பு

ஊழியர் சேமலாப நிதியமானது, ஓய்வூதியத்திற்கு உரித்தற்ற தனியார் துறை மற்றும் கூட்டுத்தாபனத் துறைப் பணியாளர்களின் ஓய்வு வாழ்க்கைக்கு சிறந்த ஆதரவாக வரும் நோக்குடன் முக்கியமான சமூகப் பாதுகாப்புத் திட்டமொன்றாக 1958 யூன் 01 ஆம் திகதி தாபிக்கப்பட்டிருந்தது. இந்த நிதியமானது, தொழில் ஆணையாளரினால் நிருவகிக்கப்படுவதுடன், நிதிக்கட்டுப்பாடானது மத்திய வங்கியினால் செய்யப்படுகின்றது.

### உதவுதொகையினைச் சேகரித்தல்

இச்சட்டத்தினால் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற அனைத்துப் பணியாளர்கள் சார்பிலான எந்தவொரு மாதம் தொடர்பிலான உதவுதொகையும் உரிய தொழில்தருநரினால் மத்திய வங்கியில் வைப்பிலிடப்படுதல் வேண்டும். கீழேயுள்ள வரைபடம், கடந்த 5 ஆண்டு காலப்பகுதியில் உதவு தொகையினைச் சேகரிப்பதிலிருந்த முன்னேற்றத்தை விபரிக்கின்றது.

| ஆண்டு | உதவுதொகை. ரூபா .மில்லியன் |
|---|---|
| 2008 | 45,951 |
| 2009 | 48,712 |
| 2010 | 54,796 |
| 2011 | 61,879 |
| 2012 | 70,157 |




### வரவேண்டிய உதவுதொகை நிலுவையைத் தன்னியக்க முறையில் அறவிடுதல்

தொழில்தருநர்களினால் புறக்கணிக்கப்படுகின்ற உதவுதொகைகளின் தரவேண்டிய நிலுவையைத் தன்னியக்கமான முறையில் அறிவிப்பதற்கும், அறவிடுவதற்கும் தேவைப்பட்ட மென்பொருள் செம்மைப்படுத்தப்பட்டுள்ளதுடன், தேவைப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

### உதவுதொகைக் கொடுப்பனவின் தன்னியக்கமுறை

வங்கிக் கணக்குகளினூடாக தன்னியக்க முறையில் ஊழியர் சேமலாப நிதிய உதவு தொகைகளைச் செலுத்துவதற்கு தொழில்நருநர்களுக்கு வசதியேற்படுத்துவதற்குத் தேவையான திருத்தங்களைச் செய்ததன் பின்னர் தேவையான ஒழுங்குவிதிகள் வகுத்தமைக்கப்பட்டுள்ளன.

### தொழில்தருநர்களைப் (தாபனங்கள்) பதிவுசெய்வதனைப் பரவலாக்குதல்

தலைமை அலுவலகத்திற்கு அனுப்பாது மாவட்ட தொழில் அலுவலகத்தில் தொழில்தருநர்களைப் பதிவுசெய்வதானது இந்த ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இது வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

### பணம் மற்றும் வட்டியின் முதலீடு

2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முதலிடப்பட்ட மொத்தப் பணத்தொகை 1,105,544 மில்லியன் ரூபாவாகும். இந்த முதலீடானது, அரசாங்க பிணைப்பொறுப்புகள், திறைசேரி முறிகள், திறைசேரி பிணைமுறிகள், கம்பனிக் கடன் அட்டை மற்றும் பங்குச் சந்தை போன்றவற்றில் செய்யப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 10% வட்டியைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### ஊழியர் சேமலாப நிதியத்தின் நன்மைகளைச் செலுத்துதல்

2012 ஆம் ஆண்டில் 115,654 விண்ணப்பங்களின்பேரில் 48,015 மில்லியன் ரூபா தொகை உரிய அங்கத்தவர்களுக்கு அல்லது சட்டப் பயனாளிகளுக்கு நிதியத்தினால் செலுத்தப்பட்டுள்ளது.

## தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்

இத்திணைக்களமானது, விபத்துக்கள், தீங்குகள், தொழிற்றுறை நோய்கள் மற்றும் தொழிலுடன் தொடர்புபட்ட நோய்களுடன் இணைந்துள்ள மோசமான சுகாதார நிலைமைகளில் அக்கறையாக இருப்பதுடன், இவற்றைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கின்றது. விபத்துக்கள், தீங்குகள் அற்ற வேலைத்தலம் மற்றும் தொழிற்றுறை சுகாதாரத்தைப் பேணிப்பாதுகாக்கின்றவிடத்து, அதேபோன்று உற்பத்தி செய்கின்ற பொருட்கள் மற்றும் வழங்கப்படுகின்ற சேவைகளின் தரத்தைப் பேணுகின்ற விடத்து உற்பத்தித்திறன் அதிகரிப்பினைப் பெறுபேறாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பது இரகசியமான தொன்றல்ல. பணியாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பானது, 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க கைத்தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் நியதிகளின்படி சட்டத் தேவைப்பா டொன்றாகும்.

### உலக பாதுகாப்புத் தினம்

உலக பாதுகாப்புத் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஏப்பிரல் 28 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் கௌரவ காமினி லொகுகே அவர்களின் தலைமையில் பியகம முதலீட்டு வலயத்தில் நடைப்பயணமொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததுடன், இந்த ஆண்டு இது சர்வதேச தொழில் தாபனத்தினால் அனுசரணையளிக்கப்பட்டிருந்தது. இத்தினத்தன்று முதலீட்டு வலயத்தின் பணியாளர்களினால் நிகழ்ச்சியொன்றும் படைக்கப்பட்டிருந்தது.

### தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதத்தின் இரண்டாவது வாரத்தின்போது நடத்தப்படுகின்றது. இந்த வாரத்தின்போது 2012 ஆம் ஆண்டில் முறைசார் மற்றும் முறைசாரா துறை இரண்டினையும் உள்ளடக்கி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

- களுத்துறை மாவட்டத்தில் மேசன் தொழில் செய்பவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்.
- நாடளாவியரீதியில் கைத்தொழில் தாபனங்களில் கொதி கலன்களின் நிலைமையைப் பரிசோதிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்.
- தொழிற்றுறைப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் காப்புறுதித் தாபனங்களின் அலுவலர்களிடையே விழிப்புணர்வினை உருவாக்குவதற்கான நிகழ்ச்சித்திட்டம்.
- கொக்கல்ல, அனுராதபுரம் மற்றும் ஹட்டன் பிரதேசங்களில் தொழிற்றுறைப் பாதுகாப்பு மற்றும் சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

### தொழில்சார் சுகாதாரம்

தொழில்சார் நோய்களினால் பாதிக்கப்படக்கூடிய சேவை சூழலைப் பரிசோதிப்பதற்காக சூழல் அளவீட்டினை இத்திணைக்களம் நடத்துகின்றது. இந்நோக்கத்திற்காக திணைக்களத்திடமிருக்கின்ற அதி நவீன அளவீட்டு உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தப் பரிசோதனைகள் முழுவதும் இலவசமாகச் செய்யப்படுகின்றன. சூழலை அளவிடுதலானது, வேலைத்தலங்களிலும், மாதிரிகளைச் சேகரித்து ஆய்வுகூடங்களிலும் செய்யப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, தொழில்சார் நோய்கள் இருக்கின்றதா அல்லது அறிகுறிகள் இருக்கின்றதா என்பதை இனங்காண்பதற்கு ஆரம்ப நிலையிலேயே பல்வேறு உடல் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன.

இந்த ஆண்டு காலப்பகுதியில் பின்வருவன ஆற்றப்பட்டிருந்தன.

- 147 சுவாசப்பை தொழிற்பாட்டு பரிசோதனைகள்
- 115 செவிப்புலன் பரிசோதனை மற்றும்
- 230 சூழல்சார் அளவீடுகள்

## விசேட துறைகள்

பெண்களின் தொழில்கள், இலங்கையின் உற்பத்திச் செயன்முறையில் விசேட பங்களிப்பினைச் செய்வதுடன், தொழில் புரிகின்ற பெண்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரி வசதிகளையும், சிறப்புரிமைகளையும் அவர்களுக்கு வழங்குதல் தொழில் திணைக்களத்தின் பொறுப்பாகும்.

அத்துடன், நாட்டின் உயிர் நாடியாக விளங்குகின்ற சிறுவர் பரம்பரையின் உரிமைகளை உலகளாவியரீதியிலான பொறுப்பாக உறுதிப்படுத்துவதற்கான கடப்பாட்டினைத் திணைக்களம் கொண்டிருக்கின்றது. தொழில் திணைக்களம், சிறுவரின் உழைக்கும் வயதினைத் தீர்மானிப்பதிலும், ஆபத்தான, தீங்கிழைக்கின்ற தொழில்களில் சிறுவர்களை ஈடுபடுத்துவதனைத் தடுப்பதிலும், அத்தகைய சந்தர்ப்பங்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதிலும், அத்தகைய தொழில்தருநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை எடுப்பதிலும் ஈடுபடுகின்றது.

**சர்வதேச மகளீர் தினம்**

சர்வதேச மகளீர் தினக் கொண்டாட்டம், கஸ்பாவ டெல்தர ஸ்ரீசுமணராம விகாரையில் தொழில், தொழில் உறவுகள் அமைச்சரின் தலைமையில் 2012.03.08 ஆம் திகதி கொண்டாடப்பட்டிருந்தது. குறைந்த வருமானத்தைப் பெறுகின்ற குடும்பங்களின் 200 பெண்களுக்கு 3 சுய வேலைவாய்ப்பு விழிப்புணர்வுப் பயிற்சிப்பட்டறைகள் 2012.03.03 ஆம் திகதியிலிருந்து நடத்தப்பட்டிருந்ததுடன், மகளீர் தின ஞாபகார்த்த வைபத்தில் அவர்களைப் பலப்படுத்துவதற்காக சிரம வாசனா நிதியத்தினால் 200 சுய வேலைவாய்ப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

**பெண்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்**

பெருந்தோட்டத் துறையில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள பெண்களுக்காக 19 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், முதலீட்டு மேம்பாட்டு வலயத்திலிருக்கின்ற பெண் பணியாளர்களுக்காக 15 உசாவுகை நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. பெண் பணியாளர்களுக்காக நிறுவனம்சார்ந்த மட்டத்தில் 70 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**சர்வதேச சிறுவர் தினம்**

சர்வதேச சிறுவர் தினம், 2012.10.01 ஆம் திகதி பண்டாரகம கின்டெல்பிட்டி ஜகதல்ல நலன்புரி சிறுவர் இல்லத்தில் தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் கௌரவ காமினி லொகுகே அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில், டவர் மண்டப கலைஞர்கள் சிறுவர்களுக் காக குறுந்நாடகமொன்றை மேடையேற்றியிருந்தனர்.

**சிறுவர் ஊழியத்தின் மோசனமான வடிவங்களை இல்லாதொழித்தல்**

தீங்கிழைக்கின்ற தொழிலாக இனங்காணப்பட்ட தொழில்களில் 14 வயதிற்கும் 18 வயதிற்கு மிடையிலான சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்துவதைத் தடுப்பதற்கான வழிகாட்டியின் நியதிகளின்படி தொழில் திணைக்களம் நடவடிக்கை எடுக்கின்றது. இந்நோக்கத்திற்காக, இது பற்றி இத்திணைக்களத்தின் அலுவலர்களுக்கும், ஏனைய சமூகத் தரப்பினர்களுக்கும் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக பயிற்சிக் கைந்நூல் மற்றும் சட்டக் கைந்நூல் ஆகியவற்றை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இனங்காணப்பட்ட ஆபத்தான பகுதிகளில் தீங்கிழைக்கின்ற தொழிலில் சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்துவதைத் தடுப்பது தொடர்பில் 15 நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் ஊடகத்தினூடாக விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக ''சுமுது'' தொலைக்காட்சி நாடகம் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப்பட்டிருந்தது.

## பொது நிருவாகம்

தொழில்தருநர், பணியாளர் சமூகத்திற்கு திருப்தியான சேவையை வழங்குகின்ற நோக்கத்திற்காக, பௌதீக, மனித மற்றும் நிதி வளங்களை ஒழுங்கமைப்பதும், அவற்றைச் சிறந்த முறையில் பேணுவதும் திணைக்களத்திற்கு அவசியமானதாகும். இதன்படி, திணைக்களத்தின் நிருவாகம் தொடர்பான முன்னேற்றம் பின்வருமாறு:

### மனித வளங்கள்

2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொழில் திணைக்களத்தில் வெவ்வேறு பதவிகளிலிருக்கின்ற அலுவலர்களின் எண்ணிக்கை 2,219 ஆக இருந்திருந்தது. திணைக்களத்திற்குச் சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் வெளியேறியவர்களின் விபரங்கள் புள்ளிவிபரக் கையேட்டில் தரப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு காலப்பகுதியில் 09 திணைக்களம்சார் உதவித் தொழில் ஆணையாளர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன், 10 சுருக்கெழுத்தாளர்களும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். சாரதிகள் 07 பேரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

திணைக்கள அலுவலர்களின் இயலளவினை வளர்ப்பதற்காக நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான விபரங்கள் இந்த புள்ளிவிபரக் கையேட்டில் விபரிக்கப்படுகின்றன.

### பௌதீக வளங்களின் அபிவிருத்தி

உத்தேசிக்கப்பட்ட ''மெஹேவர பியஸ'' கட்டடத்தின் 'பைலிங்' வேலைகள் நிறைவடைந்துள்ளன. கட்டட நிருமாணத்தை ஆரம்பிப்பதற்காக ஒப்பந்தகாரர்களிடமிருந்து விலைகூறல்கள் பெறப்பட்டுள்ள துடன், மதிப்பீடும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. கேள்விகளைப் பெற்றதன் பின்னர், 2013 ஆம் ஆண்டில் நிருமாண வேலையை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டில் நிருமாண வேலைகள் நிறைவுசெய்யப்பட்டிருந்த பிரதேச அலுவலகங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| அலுவலகம் | மொத்தச் செலவினம் (ரூபா.மில்லியன்) |
|---|---|
| குளியாப்பிட்டி | 12.8 |
| களுத்துறை | 19.5 |
| அனுராதபுரம் | 19.1 |
| கந்தளாய் | 6.9 |
| யாழ்ப்பாணம் (கட்டம் I) | 31.0 |

### நூலகம் மற்றும் தொழில் அரும்பொருளகம்

இந்தத் திணைக்களம் உள்ளடங்கலாக, தொழில் துறை தொடர்பான தாபனங்களின் தேவைப் பாடுகளுக்குப் பொருந்தும் வகையில் விடயம் சார்ந்த வகையில் தகவல்களைச் சேகரிப்பதும், தேவையானபோது அவற்றைப் பரப்புவதும், அதனூடாக தாபனங்களின் பணியாளர்களுக்கும், பொது மக்களுக்கும் அறிவினையும்,தகவல்களையும் வழங்குவதும் இத்திணைக்களத்தின் நூலகத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. தொழில் திணைக்களத்தினால் பேணப்படுகின்ற தொழில் அரும்பொருளக மானது, தொழில் துறையின் பரிணாம வளர்ச்சியை மனதைக் கவரும்வகையில் காட்சிப்படுத்து கின்றது. தொழில் துறையுடன் தொடர்புபட்ட பழைய தொழில் கட்டளைச்சட்டங்கள், சட்டங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களைச் சேகரிப்பதுடன், அவற்றைப் பேணிப்பாதுகாப்பதுவும் தொழில் அரும்பொருளகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

### வெளியீடுகள் மற்றும் ஆய்வுகள்

தொழில் துறை தொடர்பாக நாளதுவரைப்படுத்தப்பட்ட, நம்பிக்கையான தரவுகளை வழங்கும் நோக்குடன், இத்திணைக்களமானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கெடுப்புகளை நடத்துகின்றது.

- தொழில் பற்றிய வருடாந்த கணக்கெடுப்பு.
- சராசரி உழைப்பு மற்றும் வேலையாற்றியுள்ள மணித்தியாலங்களின் எண்ணிக்கை தொடர்பான கணக்கெடுப்பு.

## புள்ளிவிபரக் கையேடு

**கைத்தொழில் தொடர்புகள் பிரிவு**

| | | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| **கைத்தொழில் பிணக்குகள் பற்றிய புள்ளிவிபரங்கள்** | | | | | |
| **தெரிவிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை** | | 4,653 | 3,948 | 3,756 | 3,702 |
| **தீர்க்கப்பட்டவற்றின் எண்ணிக்கை** | | 4,294 | 3,462 | 3,384 | 3,695 |
| **பதிவுசெய்யப்பட்ட கூட்டு உடன்படிக்கைகளின் எண்ணிக்கை** | | 17 | 42 | 66 | 43 |
| **தொழிற் சங்கங்கள்** | | | | | |
| **பதிவுசெய்யப்பட்ட தொழிற் சங்கங்கள்/சம்மேளனங்கள்** | | 117 | 107 | 76 | 114 |
| **இரத்துச்செய்யப்பட்ட தொழிற் சங்கங்கள்/சம்மேளனங்கள்** | | 55 | 106 | 38 | 02 |
| **கைத்தொழில் நீதிமன்றங்கள்** | | | | | |
| **கட்டாய நடுத்தீர்ப்பிற்கு விடப்பட்டவை** | | 59 | 24 | 69 | 43 |
| **நடுத்தீர்ப்பு கூறப்பட்டவை** | | 32 | 29 | 35 | 26 |
| **பணி நிறுத்தம் பற்றிய புள்ளிவிபரங்கள்** | | | | | |
| **தெரிவிக்கப்பட்ட பணி நிறுத்தம்** | **தோட்டங்கள்** | 02 | 09 | 14 | 14 |
| | **தாபனங்கள்** | 06 | 06 | 07 | 20 |
| **பங்குபற்றிய வேலையாளர்களின் எண்ணிக்கை** | **தோட்டங்கள்** | 300 | 3,185 | 2,713 | 4,338 |
| | **தாபனங்கள்** | 4,720 | 1,923 | 3,742 | 5,626 |
| **இழக்கப்பட்ட உழைப்பு நாட்கள்** | **தோட்டங்கள்** | 300 | 23,037 | 9,877 | 25,043 |
| | **தாபனங்கள்** | 7,365 | 2,034 | 15,543 | 10,774 |
| **தொழில் முடிவுறுத்தல் பிரிவின் செயற்பாடுகள்** | | | | | |
| **பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | | 186 | 110 | 86 | 92 |
| **தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | | 90 | 175 | 111 | 143 |
| **தொழில் முடிவுறுத்தலுக்காக அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை** | | 46 | 25 | 29 | 31 |
| **சமூகக் கலந்துரையாடல் மீதான நிகழ்ச்சித்திட்டம்** | | | | | |
| **சமூகக் கலந்துரையாடல் அலகினால்** | **நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** | 90 | 86 | 98 | 153 |
| | **சமூகமளித்த வேலையாளர்களின் எண்ணிக்கை** | 5,390 | 4,041 | 4,800 | 4,751 |
| **மாவட்ட, உப அலுவலகங்களினால்** | **நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** | 108 | 100 | 124 | 225 |
| | **சமூகமளித்த வேலையாளர்களின் எண்ணிக்கை** | 3,953 | 3,496 | 4,478 | 7,902 |

2012.12.31 இல் தொழிற்படுகின்ற தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை - 2,177

2012.12.31 இல் தொழிற்படுகின்ற தொழிற் சங்க சம்மேளனங்களின் எண்ணிக்கை - 28

**சட்டத்தை வினைப்படுத்தும் பிரிவு**

| சட்டம் | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012 |
| 01. பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம் | 1653 | 2459 | 4092 | 3404 |
| 02. கைத்தொழில் பிணக்குகள் சட்டம் | 60 | 59 | 72 | 77 |
| 03. தொழில் முடிவுறுத்தல் சட்டம் | 32 | 39 | 65 | 59 |
| 04. சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம் | 139 | 166 | 238 | 290 |
| 05. கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம் | 20 | 51 | 80 | 132 |
| 06. மகப்பேற்று நன்மைகள் சட்டம் | 02 | - | 01 | 02 |
| 07. பெண்கள், இளம் நபர்கள் மற்றும் சிறுவர் தொழில் சட்டம் | 14 | 15 | 05 | 10 |
| 08. ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் | 1743 | 1484 | 3483 | 3210 |
| 09. தொழில் நியாயசபைக் கட்டளைகள் | 212 | 134 | 153 | 165 |
| 10. வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டம் | - | - | 54 | 134 |
| 11. அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியம் | 04 | - | - | 07 |

**விசேட புலனாய்வுப் பிரிவு**

| | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|
| விசாரிக்கப்பட்ட முறைப்பாடுகள் | 264 | 401 | 241 | 264 |
| கணிக்கப்பட்ட ஊ.சே.நிதியத்தின் வரவேண்டிய நிலுவைத் தொகை (ரூபா.ஆயிரத்தில்) | 17,708 | 31,498 | 153,483 | 313,770 |
| கணிக்கப்பட்ட நியதிச்சட்டப் பணங்களின் பெறுமதி (ரூபா.ஆயிரத்தில்) | 6,360 | 10,798 | 12,295 | 40,831 |

**ஊழியர் சேமலாபப் பிரிவு**

| | 2009.12.31 வரை | 2010.12.31 வரை | 2011.12.31 வரை | 2012.12.31 வரை |
|---|---|---|---|---|
| அங்கத்தவர்கள் கணக்குகளின் மொத்தம் | 12,837,602 | 13,412,847 | 14,162,590 | 14,195,726✷✷✷ |
| தொழில்தருநர்களின் மொத்த எண்ணிக்கை | 180,991 | 185,647 | 192,044 | 197,146 ✷✷✷ |
| நிதியத்தின் பெறுமதி (ரூபா. மில்லியன்) | 769,652 | 899,650 | 1,020,072 | 1,144,931 |
| செயற்பாடுடைய அங்கத்தவர்களின் எண்ணிக்கை (மில்லியன்) ✷ | 2.05 | 2.16 | 2.21 | 2.25 |
| செயற்பாடுடைய தொழில்தருநர்களின் எண்ணிக்கை ✷✷ | 61,396 | 62,295 | 64,562 | 68,771 |

| | | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| புதிய பதிவுகள் | பணியாளர்கள் | 591,211 | 719,988 | 750,941 | 127,138 |
| | தொழில்தருநர்கள் | 5,624 | 5,234 | 6,403 | 10,060 |
| நன்மைக் கொடுப்பனவுகள் | பயனாளிகளின் எண்ணிக்கை | 108,066 | 104,528 | 120,109 | 115,654 |
| | செலுத்தப்பட்ட நன்மைகள் (ரூபா.மில்லியன்) | 31,901 | 34,896 | 47,311 | 48,015 |
| உதவுதொகைகளைச் சேகரித்தமை (ரூபா மில்லியன்) | | 48,712 | 54,796 | 61,879 | 70,157 |
| ஊ.சே.நி வீடமைப்புக் கடன்கள் | அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 10,383 | 13,848 | 19,709 | 11,182 |
| | அங்கீகரிக்கப்பட்ட கடன்களின் பெறுமதி (ரூபா மில்லியன்) | 2,680 | 4,512 | 6,253 | 3,951 |

✷ ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது ஒருமுறையேனும் உதவித்தொகை செலுத்தப்பட்டுள்ள அங்கத்தவர்கள் கணக்குகள்.

✷✷ ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது ஒருமுறையேனும் பணியாளர்கள் சார்பாக உதவித் தொகைகளைச் செலுத்தியுள்ள தொழில்தருநர்கள்.

✷✷✷ 2012.09.30 வரை

### தொழிற்றுறைப் பாதுகாப்புப் பிரிவு

| | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட தொழிற்சாலைகளின் மொத்த எண்ணிக்கை | 18,247 | 20,053 | 20,971 | 22,459 |
| செய்யப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை | 4,636 | 4,482 | 4,749 | 6,700 |
| பரிசோதகர்களின் எண்ணிக்கை (பொறியியலாளர்கள்) | 28 | 28 | 27 | 28 |
| திட்டங்களுக்கான அங்கீகாரம் | 75 | 104 | 122 | 106 |
| விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகள் | 155 | 265 | 294 | 229 |

### தொழில்சார் சுகாதாரப் பிரிவு

| | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|
| தொழிற்சாலை பரிசோதனைகளின் எண்ணிக்கை | 853 | 1,042 | 220 | 410 |
| விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 66 | 186 | 193 | 137 |

### திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு

| | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|
| பதவிநிலை அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 12 | 8 | 22 | 4 |
| முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 4 | 1 | 14 | 8 |
| கணினிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 24 | 33 | 16 | 33 |
| ஏனைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 9 | 2 | 2 | 2 |
| பட்டப் பின்படிப்பு பாடநெறிகள் | 48 | 8 | 26 | 20 |
| வெளிவாரிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 13 | 16 | 37 | 57 |
| முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் | 6 | 8 | 7 | 5 |
| தொழில் ஆய்வுகள் | - | - | 13 | 19 |

**நிதிப் பிரிவு**

| | | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | ஏற்பாடு (ரூபா) | 769,571,000.00 | 982,340,000.00 | 967,407,000.00 |
| | செலவினம் (ரூபா) | 760,752,134.00 | 970,274,622.00 | 953,894,760.00 |
| மூலதனச் செலவினம் | ஏற்பாடு (ரூபா) | 222,000,000.00 | 371,936,197.00 | 372,365,000.00 |
| | செலவினம் (ரூபா) | 218,993,558.00 | 333,633,002.00 | 299,512,890.00 |

**தாபனங்கள் பிரிவு**

| | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|
| **ஆண்டின் ஆரம்பத்தில் மொத்தப் பதவியணி** | 2,185 | 2,184 | 2,271 |
| • திணைக்களத்தினால் புதிய ஆட்சேர்ப்புக்கள் | 105 | - | 23 |
| • இணைந்த சேவையின் புதிய நியமனங்களாகச் சேர்க்கப்பட்டவர்கள் | 25 | 159 | 30 |
| • இடமாற்றல்கள் | 2 | 15 | (7) |
| • ஏனைய காரணங்களினால் தொழில் திணைக்களத்தின் பதவியினருடன் சேர்க்கப்பட்டவர்கள் | - | - | 1 |
| • ஓய்வுபெற்றவர்கள் | (69) | (67) | (52) |
| • ஏனைய காரணங்களினால் தொழில் திணைக்களத்தின் பதவியினர் விலகுதல் | (64) | (20) | (47) |
| **ஆண்டின் இறுதியில் மொத்தப் பதவியணி** | 2,184 | 2,271 | 2,219 |

## பின்னிணைப்பு

**திணைக்களத்தின் நிறுவனம்சார் கட்டமைப்பு**

